## போக்குவரத்துத் துறை

## அறிவிப்புகள்

### 1. புதிய பேருந்துகள் அறிமுகம் :

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** 2012–13ஆம் நிதியாண்டில் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும், 3000 புதிய பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான மொத்த செலவினம் ரூபாய் 548 கோடி ஆகும்.

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் சராசரி வயது 4.24 என இருப்பினும், போக்குவரத்துக் கழகங்களில், ஆறு வருடங்கள் அல்லது 7 இலட்சம் கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்பட்ட பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, மேற்காணும் புதிய பேருந்துகள் வாங்கி இயக்கப்படவுள்ளன. அதன்படி, சென்னை – மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 150 பேருந்துகளும், சென்னை–அரசு விரைவுப்



போக்குவரத்துக் கழகத்திற்கு 299 பேருந்துகளும், விழுப்புரம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 550 பேருந்துகளும், சேலம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 301 பேருந்துகளும், கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 530 பேருந்துகளும், கும்பகோணம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 540 பேருந்துகளும், மதுரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 380 பேருந்துகளும், திருநெல்வேலி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 250 பேருந்துகளும், ஆகமொத்தம் 3,000 பேருந்துகள் இந்த நிதியாண்டில் வாங்கி இயக்கப்படும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு வாங்கப்படும் 299 சொகுசுப் பேருந்துகள், பயணிகள் மேலும் பயன்பெறும் வகையில், வசதியான இருக்கைகளுடனும், கூடுதல் வசதிகளுடனும் வடிவமைக்கப்படும். இதன் மூலம், அரசு விரைவு போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளும் புதிய பேருந்துகளாகவே இயக்கப்படும்.

**2. சென்னை மாநகரில் 100 சிற்றுந்துகள் அறிமுகம்:**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி,** சென்னை மாநகரில் பேருந்து வசதியளிக்க இயலாத பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, அவர்களுக்கும் பேருந்து வசதி அளிக்கவும், அவர்கள் வசிக்கும் பகுதிகளை, பேருந்துநிலையம் மற்றும் இரயில் நிலையங்களுடன் இணைக்கும் வகையிலும், முதன்முறையாக 100 சிற்றுந்துகள் **(Mini Bus)** மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும்.

**3. அனைத்து மாவட்ட தலைநகரங்களிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வால்வோ பேருந்துகள் இயக்குதல் :**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** அனைத்து மாவட்ட தலைநகரங்களிலிருந்தும், சென்னைக்கு மக்கள் வசதியாகச் சென்றுவர குளிர்சாதன வால்வோ பேருந்துகள் அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் முதற்கட்டமாக, 2012–2013–ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வால்வோ பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



**4. கூடுதல் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு :**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகள் கூண்டு கட்டும் திறனை உயர்த்தும் பொருட்டு, சென்னையில் குரோம்பேட்டை, பொள்ளாச்சி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் கூடுதலாக உருவாக்கப்படும். இதனால் இனிவரும் காலங்களில், பேருந்து கூண்டு கட்டும் பணி தனியாரிடம் ஒப்படைப்பது படிப்படியாக குறைக்கப்பட்டு, அரசு போக்குவரத்துக் கழகங்களிலேயே கூண்டு கட்டப்படும்.

**5. வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கையை 20,000—ஆக உயர்த்துதல்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில், **30.06.2011** அன்றைய நிலவரப்படி, 19,167 வழித்தடப் பேருந்துகள் **(Scheduled Services)** இயக்கப்பட்டு வருகின்றன. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி,** இவ்வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை **20,000—**ஆக உயர்த்தப்படும். இதன் மூலம் பொது மக்களுக்கு கூடுதல் போக்குவரத்து சேவை அளிக்க இயலும். **“தொலைநோக்கு பார்வை 2023”**—இன்படி சென்னை மாநகரில் அனைத்து அடிப்படை வசதிகளும், அனைத்து மக்களுக்கும் வழங்கும் தொலைநோக்கிற்கிணங்க, சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் **2010**–2011-ஆம் ஆண்டில், **3,140**ஆக இருந்த வழித்தடங்கள் **2012**–2013-ஆம் ஆண்டிற்குள் **3,500** வழித் தடங்களாக உயர்த்த, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.



**6. நீதிமன்றங்களின் பிணையத்தில் உள்ள பேருந்துகளை மீட்டல் :**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** நீதிமன்றங்களின் பிணையத்தில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான **219** பேருந்துகளை மீட்பதற்கு ஒரு முறை சிறப்பு உதவியாக **13** கோடியே **91** இலட்சம் ரூபாய் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்படும்.

**7. சாலை போக்குவரத்து நிறுவனத்தால் மேலும் 13 மாவட்டங்களில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் அமைத்தல் :**

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் “கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம்” தற்போது **19** மாவட்டங்களில் உள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி,** மேலும், அரியலூர், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர்,

இராமநாதபுரம், சிவகங்கை, நீலகிரி, தேனி, திருவாரூர், தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய 13 மாவட்டங்களில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 8. திருநெல்வேலியில் தலைமையகக் கட்டிடம் கட்டுதல் :

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் தலைமை அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 9. விருப்பம்போல் பேருந்தில் பயணம் செய்யும் பயணச்சீட்டு வழங்கும் முறையினை மாநகராட்சிப் பகுதிகளில் விரிவுப்படுத்துதல் :

பயணிகள் விருப்பம் போல் பேருந்தில் பயணம் செய்யும் பயணச்சீட்டு விற்பனை சென்னை மாநகர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி



ஆகிய மாநகராட்சி பகுதிகளில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறையில் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | ஒரு நாள் பயணச் சீட்டு | – | ரூ. 50/– |
| 2) | வாராந்திரப் பயணச் சீட்டு | – | ரூ. 300/– |
| 3) | மாதாந்திரப் பயணச் சீட்டு | – | ரூ.1000/– |

இத்திட்டத்தினை வேலூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சி பகுதிகளுக்கும் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க** விரிவுபடுத்தப்படும்.

### 10. எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களை பத்து அரசு போக்குவரத்துக் கழகங்களாக மாற்றி அமைத்தல் :

தமிழ்நாட்டில் தற்போது இயங்கி வரும் 8 அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயணிகள் வசதி, நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் பேருந்து பராமரிப்புப் பணி ஆகியவற்றை மேம்படுத்த, அவற்றை 10 போக்குவரத்துக் கழகங்களாக மாற்றியமைக்க ஒரு தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரையின் பேரில் கீழ்க்காணும்

போக்குவரத்துக் கழகங்களை மாற்றியமைக்க, **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்படி:

- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், ஸ்ரீரங்கத்தை தலைமையிடமாகக் கொண்டு திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களை இயக்க எல்லைகளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (ஸ்ரீரங்கம்) லிமிடெட், ஸ்ரீரங்கம் எனவும்;

- கும்பகோணம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களை இயக்க எல்லைகளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் என்றும், இரண்டு போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கப்படும்.



- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் – கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை இயக்க எல்லைகளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் என்றும்;

- வேலூர், காஞ்சிபுரம், மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை இயக்க எல்லைகளாகக் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (வேலூர்) லிமிடெட், வேலூர் – என இரண்டு போக்குவரத்துக் கழகங்களாக செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11. புதிய மண்டலங்கள் உருவாக்குதல் :**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க,** அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் போக்குவரத்து செயல்பாட்டினை மேம்படுத்த ஊட்டி, கரூர், தூத்துக்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நான்கு புதிய மண்டலங்கள் துவக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. கலந்தாய்வு மூலம் பணிமாறுதல் :**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள், தாங்கள் விரும்பும் இடத்திற்கு ஒரு முறை கலந்தாய்வு மூலம் பணிமாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**13. மாணவர்களுக்குக் கட்டணமில்லா கையடக்க பேருந்து பயண அட்டை வழங்குதல் :**

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தில், அனைத்து மாணவர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா கையடக்கப் பேருந்து பயண அட்டையைப் போன்று, அனைத்து மாணவர்களும் எளிதாக எடுத்துச் செல்லும் வகையில், கட்டணமில்லா கையடக்கப் பேருந்து பயண அட்டை **(Smart Card), மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14. பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் சி.டி. நிழல் ஒளிக்கூறு இயந்திரம் (C.T. Scan Machine) அமைத்தல் :**

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி,** பெருந்துறை மருத்துவ கல்லூரியின் செயல்பாட்டினை மேம்படுத்தும்

பொருட்டு, நடப்பாண்டில் ரூபாய் ஒரு கோடி செலவில் சி.டி. நிழல் ஒளிக்கூறு இயந்திரம் **(CT Scan Machine)** வாங்கி உபயோகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15. சாலைப்போக்குவரத்து நிறுவனப் பொறியியல் கல்லூரியில் கூடுதல் இடங்கள் :**

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் ஈரோடு பொறியியல் கல்லூரியில் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** கட்டிடப் பொறியியல் பாடப்பிரிவில் **(Civil Engineering) 30** இடங்களும், தானியங்கி பொறியியல் பாடப்பிரிவில் **(Automobile Engineering) 30** இடங்களும் கூடுதலாக உருவாக்கப்பட்டு, இக்கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.



**16. சாலை போக்குவரத்து நிறுவன தொழில்நுட்பக் கல்லூரிகளில் இயந்திரவியல் பட்டயப் படிப்பு அறிமுகம்:**

சாலை போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் இயங்கும் குரோம்பேட்டை, பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளில் **(Polytechnic) மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி,** இயந்திரவியல் பட்டயப்படிப்பு **(Diploma in Mechanical Engineering) 2012–2013**–ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, **2013–2014**–ஆம் கல்வி ஆண்டு முதல் மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

**V.செந்தில்பாலாஜி**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**